ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2261/51 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06
*2261/51 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரோகித்த அபேகுணவர்தன,**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2021, திசெம்பர் 29.*

**ஒழுங்குவிதிகள்**

*1. (1)* இவ்வொழுங்குவிதிகள் *2021* ஆம் ஆண்டின் *3* ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (நிர்மாணம் - தீப்பாதுகாப்பு, தீக்கண்டுபிடிப்பு மற்றும் தீயணைப்பு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(2)* இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது, *1974* ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேச சமவாயத்தின் அத்தியாயம் II-*2*, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான *1988* ஆம் ஆண்டின் வரைவாவணம், அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட அடுத்துப்பின்னரான ஏதேனும் திருத்தம் என்பனவற்றுக்குப் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

1A - G 35890 — 510 (2022/05)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பாகம் I**

**இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையனவாந்தன்மை**

*2. (1) இவ்வொங்குவிதியின் உபஒழுங்குவிதிகள் (2, (3), (4), (5) மற்றும் (6) இன் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையவையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ளவையுமான கப்பல்களுக்கும் மற்றும் வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*(2) (இல்வொழுங்குவிதிகளில் "சமவாயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் என்பவற்றில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது-*

- *(அ) போர்க் கப்பல்களுக்கும் படைக்குழுவினர் கப்பல்களுக்கும் ;*
- *(அ) 500 முழு மொத்தத் தொன்னளவுக்குக் குறைவான சரக்குக் கப்பல்களுக்கும் ;*
- *(இ) பொறிமுறை வழிவகைகள் மூலம் உந்தப்படாத கப்பல்களுக்கும்*
- *(ஈ) தொன்மையான கட்டமைப்பைக் கொண்ட மரக்கப்பல்களுக்கும் ;*
- *(உ) வியாபாரத்தில் ஈடுபட்டிராத பொழுதுபோக்கு உலாப்படகுகளுக்கும் : அத்துடன்*
- *(ஊ) மீன்பிடிக் கலன்களுக்கும்.*

*(3) சமவாயத்தில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்கு விதிகள் 2012, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*(4) சமவாயத்தில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, 2012, யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்கள், சமபல்கள், சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் ஒழுங்குவிதி 1(2) இல் குறித்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.*

*(5) சமவாயத்தின் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, தாங்கற் கலன்களைக் குறிப்பீடு செய்கின்ற தேவைப்பாடுகள், சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் ஒழுங்குவிதி 1(6) இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைந்த தாங்கற் கலன்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*(6) சமவாயத்தின் அத்தியாயம் (V) இல் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகள், வட அமெரிக்காவின் பெரிய ஏரிகளிலும் சென்ட் லோரன்ஸ் ஆற்றிலும், கேப் டெஸ் ரொசியேர்ஸிலிருந்து அன்ட்டிகொஸ்ட்டி தீவு, மெற்குப் புள்ளிவரையும், அன்ட்டிகொஸ்ட்டி தீவின் வடபுறத்தில் 63 ஆம் உச்சவரையிலிருந்தும் வரையப்பட்டவொரு நேர்க்கோடாகக் கிழக்குவரை மட்டுமே நீர்வழிப்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற இலங்கைக் கப்பல்களுக்கு ஏற்புடையனவாதலாகாது.*

*3. (1) பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள், திரிபுகள் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட வெளிப்பொருத்திகளுக்கு உட்படுத்தப் படுகின்ற எல்லாக் கப்பல்களும், ஆகக்குறைந்தது இக்கப்பல்களுக்கு முன்னர் ஏற்புடையனவாகவிருந்த தேவைப்பாடுகளுக்கேனும் தொடர்ந்து இணங்கியொழுகுதல் வேண்டும். அத்தகைய கப்பல்கள், 2012 யூலை 1 ஆந்தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்படின், விதியென்றமுறையில், அவை அத்தகைய பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள், திரிபுகள் அல்லது வெளிப்பொருத்திகளுக்கு உட்படுமுன்னர் அவை இணங்கியோழுகிய ஆகக்குறைந்த அதே அளவுக்கேனும் அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களுக்கான தெவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.*

*(2) ஒரு கப்பலின் பரிமாணங்களை அல்லது பயணிகளுக்கான இடவசதி இடங்களைக் கணிசமானளவு மாற்றுகின்ற அல்லது ஒரு கப்பலின் சேவைக்காலப்பகுதியையும் அதனோடு தொடர்புபட்ட வெளிப்பொருத்திகளின் காலத்தையும் கணிசமானளவு அதிகரிக்கின்ற பழுதுபார்த்தல்களும், மாற்றங்களும், திரிபுகளும் பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமானதும் செயல்முறைக்குகந்ததும் எனக் கருதுமளவுக்கு 2012 யூலை 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களுக்கான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதல் வேண்டும்.*

*4. (1) வழமையாகச் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபடாததும் ஆனால் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தனியொரு சர்வதேசக் கடற்பயணத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவைப்படுத்தப்படுவதுமான கப்பலொன்று, (இவ்வொழுங்குவிதிகளில்*

''பணிப்பாளர் தலைமையதிபதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுள் எவற்றிலிருந்தும் விலக்களிக்கப்படலாம் :

ஆயின், கப்பலினால் பொறுப்பேற்கப்படவுள்ள கடற் பயணத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் போதியனவாகவுள்ள காப்புத் தேவைப்பாடுகளுக்கு அத்தகைய கப்பல் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, புதிய வகையினவான சிறப்புக்கூறுகளை அடக்கியுள்ள ஏதேனும் கப்பலுக்கு, சமவாயத்தின் அத்தியாயங்கள் II-1, II-2, III மற்றும் IV என்பவற்றின் ஏற்பாடுகளுள் எவற்றினதும் பிரயோகம் அத்தகைய சிறப்புக்கூறுகளின் அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சியையும் சர்வதேசக் கடற் பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களில் அவை சேர்க்கப்படுவதனையும் பார தூரமான முறையில் தடைசெய்யக்கூடிய அவ்வேற்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கப்பல்கள், அப்பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் அவை எச்சேவைக்காக உட்கருதப்படுகின்றனவோ அச்சேவைக்குப் போதியனவாகவுள்ளவையும், கப்பலின் ஒட்டுமொத்தக் காப்பை உறுதிப்படுத்துகின்றவாறான அத்தகையனவாகவுள்ளவையும், கப்பல் செல்லவுள்ள அரசுகளின் அரசாங்கங்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்கவையுமான காப்புத் தேவைப்பாடுகளுக்கு எவ்வாறாயினும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, கடற்பயணத்தின் பாதுகாப்பளிக்கப்பட்ட தன்மையும் நிலைமைகளும் சமவாய்த்தின் அத்தியாயம் II-2 இன் எவையேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரயோகத்தை நியாயமற்றதாக்கும் அல்லது அவசியமற்றதாக்கும் அத்தகையனவாகவுள்ளனவெனக் கருதினால், அவற்றின் கடற்பயணத்திபோது மிகக்கிட்டிய நிலப்பரப்பிலிருந்து 20 மைல்களுக்கு மேற்படச் செல்லாத தனிப்பட்ட இலங்கைக் கப்பல்களுக்கு அல்லது வகுப்பினவான இலங்கைக் கப்பல்களுக்கு அத்தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்.

(4) அத்தகைய ஏதேனும் விலக்களிப்பை அனுமதிக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதி, (இவ்வொழுங்குவிதிகளில் ''ஒழுங்கமைப்பு' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புக்கு அதுபற்றிய விபரங்களையும் அதற்கான காரணங்களையும் அறிவித்தல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட விலக்களிப்புகள், 2022 ஆம் ஆண்டு 01 மாதம் 06 ஆந்தேதிய 2261/ 49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்.

(6) சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் விவரணத்தினதான ஒரு கப்பல் தொடர்பாக அதன் இயைபான தேவைப்பாடுகளைப் பணிப்பாளர் தலைமையதிபதி விட்டுக்கொடுக்கலாம்; ஆயின், அத்தகைய கப்பல், சமவாயத்தின் அத்தியாயம் II-2 இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அல்லது அத்தகைய ஏற்பாடு நியாயமற்றது அல்லது செயல்முறைக்குகந்ததல்ல எனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படுமிடத்து மாற்றுத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(7) சமவாயத்தின் அத்தியாயம் II-2 இனால் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரமொன்று அல்லது வகைசார்ந்த அங்கீகாரமொன்று அல்லது சமவாயத்தின் அத்தியாயம் II-2 இனால் அனுமதிக்கப்பட்ட சமமான ஒழுங்கேற்பாடு அல்லது விட்டுக்கொடுப்பொன்று -

(அ) எழுத்திலிருப்பின் ;

(ஆ) அது பயனுக்குவரும் தேதியைக் குறிப்பிடின் ; அத்துடன்

(இ) அதிற் குறிப்பிடப்பட்ட எவையேனும் நிபந்தனைகள் இணங்கியொழுகப்படின்

மட்டுமே செல்லுபடியாகவுள்ளது.

(8) பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமான அறிவித்தல் கொடுப்பதன்மீது, இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை, அங்கீகாரத்தை அல்லது விட்டுக்கொடுப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

5. யாத்திரிகர் தொழில் போன்ற, பெரும் எண்ணிக்கையினரான விசேட தொழிற் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான விசேட தொழில்களில் தொழிலுக்கமர்த்தப்பட்ட பயணிக் கப்பல்களின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை வலுவுறுத்துவது செயல்முறைக்குகந்ததல்லதெனத் திருப்திப்படின் அத்தகைய கப்பல்களுக்கு அத்தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம் ; ஆயின், அவை பின்வருவனவற்றின் ஏற்பாடுகளுக்கு முழுமையாக இணங்கியொழுகுதல் வேண்டும் :

(i) 1971 ஆம் ஆண்டின் விசேட தொழிற் பயணிக் கப்பல்கள் உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்ட விதிகளுடனும்; அத்துடன்

(ii) 1973 ஆம் ஆண்டின் விசேட தொழிற்பயணிக் கப்பல்களுக்கான இடவசதித் தேவைப்பாடுகள் பற்றிய வரை வாவணத்துடன் இணைக்கப்பட்ட விதிகளுடனும்.

## பாகம் II

### தீப்பாதுகாப்பு, தீக்கண்டுபிடிப்பு மற்றும் தீயணைப்பு

6. இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள கப்பலொன்று, சமவாயத்திலுள்ள விவரணத்தினதான ஒரு கப்பல் தொடர்பாக அதன் அத்தியாயம் II-2 இன் பாகங்கள் B, C, D மற்றும் G இல் குறித்துரைக்கப்பட்ட தீப்பாதுகாப்பு, தீக்கண்டுபிடிப்பு மற்றும் தீயணைப்புத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

7. (1) தீக்காப்பு வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும், சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் பாகங்கள் B, C, D, E மற்றும் G இல் தரப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளிலிருந்து விலகலாம் ; ஆயின், அவை, வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும் சமவாயத்தின் அத்தியாயம் II-2 இல் குறித்துரைக்கப்பட்ட தீக்காப்புக் குறிக்கோள்களையும் பணிசார் தேசைப்பாடுகளையும் எதிர்கொள்ளுதல் வேண்டும்.

(2) தீக்காப்பு வடிவமைப்பு அல்லது ஒழுங்கேற்பாடுகள் சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளிலிருந்து விலகும்போது, மாற்று வடிவமைப்பினதும் ஒழுங்கேற்பாடுகளினதும் பொறியியல் பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் அங்கீகாரம், சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் பாகம் F க்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒப்பந்தஞ் செய்கின்ற எல்லா அரசாங்கங்களுக்கும் சுற்றி வழங்குவதற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மாற்று வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும் சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட தகவலை ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

## பாகம் III

### தொழிற்பாடுசார் தேவைப்பாடுகள்

8. (1) இவ்வொழுங்குவிதியின் நோக்கமானது, கப்பலுக்கு வழங்கப்பட்ட தீக்காப்பு வழிமுறைகளின் பயனுறுதன்மையைப் பேணுதலும் கண்காணித்தலுமாகும். இந்நோக்கத்துக்காக, பின்வரும் பணிசார் தேவைப்பாடுகள் எதிர்கொள்ளப்படுதல் வேண்டும் :

(அ) தீப்பாதுகாப்பு முறைமைகளும் தீயெதிர்ப்பு முறைமையும் துணைப்பொருட்களும் பாவனைக்கு ஆயத்தமாகப் பேணப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தீப்பாதுகாப்பு முறைமைகளும் தீயெதிர்ப்பு முறைமைகளும் துணைப்பொருட்களும் முறையாகப் பரீட்சிக்கப்பட்டு சோதனையிடப்படுதல் வேண்டும்.

(2) கப்பல் சேவையிலிருக்கையில் எல்லா நேரங்களிலும், உப ஒழுங்குவிதி 1 (அ) இன் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படுதல் வேண்டும். பின்வரும் சந்தர்ப்பங்களின்போது ஒரு கப்பல் சேவையிலல்ல:

(அ) அது பழுதுபார்த்தல்களுக்காக அல்லது பயன்படுத்தப்படாதிருப்பதற்காக (ஒன்றில் நங்கூரமிடுகையில் அல்லது துறைமுகத்தில்) அல்லது உலர்துறையில் இருக்கும்போது;

(ஆ) கப்பற் சொந்தக்காரரினால் அல்லது அவரின் பிரதிநிதியினால் அது சேவையிலல்லதென வெளிப்படுத்தப்படும்போது ; அத்துடன்

(இ) பயணிக் கப்பல்களின் விடயத்தில், கப்பலில் பயணிகள் எவரும் இல்லாதபோது.

(3) பின்வரும் தீப்பாதுகாப்பு முறைமைகள், தீயேற்படின் அவற்றின் தேவைப்பட்ட செயல்நிறைவேற்றுகையை உறுதிப்படுத்தும் வகையில் நன்னிலையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் :

(அ) தீயெதிர்ப்புப் பிரிவுகளுட்பட கட்டமைப்புச்சார் தீப்பாதுகாப்பும், இப்பிரிவுகளில் துவாரங்களையும் ஊடுருவுதல்களையும் பாதுகாத்தலும்;

(ஆ) தீக்கண்டுபிடிப்பும் தீயெச்சரிக்கை முறைகளும் ; அத்துடன்

(இ) தப்பிச்செல்லும் வழிகளுக்கான முறைமைகளும் துணைப்பொருட்களும்.

(4) தீயெதிர்ப்பு முறைமைகளும் துணைப்பொருட்களும் சிறந்த தொழிற்படு நிலையிலும் உடனடிப் பாவனைக்காகத் தயார்நிலையில் கிடைக்கக்கூடியனவாகவும் வைத்திருக்கப்படுதல் வேண்டும். பயன்படுத்தப்பட்டுள்ள காவிச்செல்லத்தக்க தீயணைப்பான்கள் சமமான அலகுடன் உடனடியாக மீள மின்னேற்றப்படுதல் அல்லது மாற்றீடுசெய்யப்படுதல் வேண்டும்.

9. (1) பேணுகையும், பரீட்சிப்பும், சோதனைகளும் ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளின் அடிப்படையிலும் தீயெதிர்ப்பு முறைமைகளினதும் துணைப்பொருட்களினதும் நம்பகமானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு உரிய கவனஞ்செலுத்துகின்ற முறையிலும் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) பேணுகைத் திட்டம் கப்பலில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும்போதெல்லாம் சோதனைக்குக் கிடைக்கக்கூடியதாதலும் வேண்டும்.

(3) பேணுகைத் திட்டம் நிறுவப்படுமிடத்து ஆகக்குறைந்தது பின்வரும் தீப்பாதுகாப்பு முறைமைகளையும் தீயெதிர்ப்பு முறைமைகளையும் துணைப்பொருட்களையும் அது உள்ளடக்குதல் வேண்டும் :

(அ) நெளிகுழாய்கள், கூம்புக்குழல்கள் மற்றும் சர்வதேசக் கரையோரத் தொடுப்புக்களுட்பட தீயணைப்புக்குழாய்களும், தீயணைப்புப்பம்பிகளும், நெடுநீர்க்குழாய்களும் ;

(ஆ) பொருத்தப்பட்ட தீக்கண்டுபிடிப்பு முறைகளும் வேறு தீயணைப்புத் துணைப்பொருட்களும் ;

(இ) பொருத்தப்பட்ட தீயணைப்பு முறைமைகளும் வேறு தீயணைப்புத் துணைப்பொருட்களும் ;

(ஈ) தன்னியக்கத் தெளிப்பான், தீக்கண்டுபிடிப்பு மற்றும் தீயெச்சரிக்கை முறைமைகள் ;

(உ) தீ மற்றும் புகைத் தணிப்புக்கள், விசிறிகள் மற்றும் அவற்றின் கட்டுப்பாடுகள் உட்பட காற்றோட்ட முறைமைகள்;

(ஊ) எரிபொருள் வழங்குகையின் அவசரகால மூடுகை ;

(எ) தீக்கதவுகள், அவற்றின் கட்டுப்பாடுகளுட்பட ;

(ஏ) பொது அவசரகால எச்சரிக்கை முறைமைகள் ;

(ஐ) அவசரகாலத் தப்பிச்செல்கை சுவாசிப்பு உபாயங்கள் ;

(ஒ) சூழ்மின்னூட்டம் உட்பட காவிச்செல்லத்தக்க தீயணைப்பான்கள் ; அத்துடன்

(ஓ) தீயெதிர்ப்பு ஆளணியினரின் ஆடைகள்

(4) பேணுகை நிகழ்ச்சித்திட்டம் கணனி அடிப்படையின் மீதானதாகவிருக்கலாம்.

*10. (1)* ஒழுங்குவிதி *9(3)* இல் நிரற்படுத்தப்பட்ட தீப்பாதுகாப்பு முறைமைகளுடனும் துணைப்பொருட்களுடனும் மேலதிகமாக, *36* பயணிகளுக்கு மேற்பட்டோரை ஏற்றிச்செல்கின்ற கப்பல்கள், தாழ்ந்த அமைவிட வெளிச்சமிடுகைக்காகவும் பகிரங்க உரையாற்றல் முறைமைகளுக்காகவும் பேணுகைத் திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

*(2)* ஒழுங்குவிதி *9(3)* இல் நிரற்படுத்தப்பட்ட தீப்பாதுகாப்பு முறைமைகளுடனும் துணைப்பொருட்களுடனும் மேலதிகமாக, தாங்கற் கலன்கள் பின்வருவனவற்றுக்கான பேணுகைத் திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் வேண்டும் :

(அ) மந்தமான வாயுமுறைமைகள்;
(ஆ) மேற்றள நுரை முறைமைகள் ;
(இ) சரக்குப் பம்பியறைகளில் தீக்காப்பு ஒழுங்கேற்பாடுகள் ; அத்துடன்
(ஈ) பற்றி எரியத்தக்க வாயு கண்டுபிடிப்பான்கள்.

*11. (1)* கப்பலொன்றின்றிலுள்ள கப்பற்றொகுதி உறுப்பினர்கள் தீக்காப்புப்பற்றிய அறிவுறுத்தலையும் அவர்களின் குறித்தளிக்கப்பட்ட கடமைகளையும் கப்பலில் பெறுதல் வேண்டும். தீயணைப்புக்குப் பொறுப்பாகவுள்ள திறத்தவர்கள் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும். இத்திறத்தவர்கள், கப்பல் சேவையிலிருக்கையில் எல்லா நேரங்களிலும் அவர்களின் கடமைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஆற்றலுடையவர்களாதல் வேண்டும்.

*(2)* கப்பற்றொகுதி உறுப்பினர்கள் கப்பலின் ஒழுங்கேற்பாடுகள் மற்றும் பயன்படுத்துவதற்கு அவர்கள் கோரப்படக்கூடிய எவையேனும் தீயெதிர்ப்பு முறைமைகள் அத்துடன் துணைப்பொருட்களின் அமைவிடமும் தொழிற்பாடும் பற்றிப் பரிச்சயமகவிருப்பதற்குப் பயிற்சியளிக்கப்படுதல் வேண்டும். அவசரகாலத் தப்பிச்செல்கை சுவாசிப்பு உபாயங்களின் பாவனையிலான பயிற்சி கப்பலின்மீதான பயிற்சியின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(3)* தீயெதிர்ப்புக் கடமைகள் குறித்தளிக்கப்பட்ட கப்பற்றொகுதி உறுப்பினர்களின் செயல்நிறைவேற்றுகை, சீராக்கப்படுவதற்குத் தேவைப்பட்ட துறைகளை அடையாளங் காண்பதற்கும், தீயெதிர்ப்புத் தேர்ச்சிகளிலான தகுதியை உறுதிப்படுத்துவதற்கும், தீயெதிர்ப்பு ஒழுங்கமைப்பின் தொழிற்பாடுசார் தயார்நிலையை உறுதிப்படுத்துவதற்கும் கப்பலின்மீதான பயிற்சியையும் பன்முறைப்பயிற்சிகளையும் நடாத்துவதன்மூலம் காலத்துக்குக்காலம் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

*(4)* கப்பலின் தீயணைப்பு முறைமைகளினதும் துணைப்பொருட்களினதும் பாவனையில் கப்பலின் மீதான பயிற்சி, சமவாயத்தின் அத்தியாயம் III இன் *19.4* இன் ஏற்பாடுகளுக்கிணங்க திட்டமிடப்பட்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

*(5)* தீக்கெதிரான பன்முறைப் பயிற்சிகள், சமவாயத்தின் அத்தியாயாம் III இன் ஒழுங்குவிதி *19.3* மற்றும் ஒழுங்குவிதி *19.5* இன் ஏற்பாடுகளுக்கிணங்க நடாத்தப்பட்டு பதியப்படுதல் வேண்டும்.

*(6)* பன்முறைப் பயிற்சிகளின் போது பயன்படுத்தப்பட்ட சுவாசிப்புத் துணைக்கருவி உருளைகளுக்கு மீண்டும் மின்னேற்றுவதற்குக் கப்பலின்மீதான வழிவகைகள் ஏற்பாடுசெய்யப்படுதல் வேண்டும் அல்லது பயன்படுத்தப்பட்டவற்றை மாற்றீடுசெய்வதற்குப் பொருத்தமான எண்ணிக்கையினவான உதிரி உருளைகள் கப்பலில் கொண்டு செல்லப்படுதல் வேண்டும்.

*12. (1)* ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பயிற்சிக் கைந்நூல், கப்பற்றொகுதியினரின் ஒவ்வோர் உணவறையிலும் பொழுது போக்கறையிலும் அல்லது கப்பற்றொகுதியினரின் ஒவ்வொரு சிற்றறையிலும் வழங்கப்படுதல் வேண்டும்.

*(2)* பல்வேறு தொகுதிகளைக் கொண்டிருக்கக்கூடிய பயிற்சிக் கைந்நூல், உப ஒழுங்குவிதி *(3)* இல் தேவைப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்களையும் தகவலையும் இலகுவாக விளங்கக்கூடிய பதங்களிலும் இயன்றவிடத்தெல்லாம் படவரைதல்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய தகவலின் ஏதேனும் பாகம், கைந்நூலுக்குப் பதிலாகக் கட்புல-செவிப்புல உதவுகருவிகளென்ற வடிவத்தில் வழங்கப்படலாம்.

*(3)* பயிற்சிக் கைந்நூல் பின்வருவனவற்றை விபரமாக விளக்குதல் வேண்டும் :

(அ) புகைத்தலினாலான ஆபத்துக்கள், மின்சார இடையூறுகள், பற்றி எரியத்தக்க திரவங்கள் மற்றும் ஒத்த பொதுவான கப்பல்களின்மீதான இடையூறுகள் பற்றியவை தொடர்பாகப் பொதுவான தீக்காப்புச் செயல்முறையும் முற்காப்புகளும் ;

(ஆ) தீயொன்றுபற்றி அறிவிப்பதற்கான நடவடிக்கைமுறைகள், கையினால்தொழிற்படுத்தபட்ட அழைப்புப்புள்ளிகளைப் பயன்படுத்துதல் உட்பட தீயெதிர்ப்புச் செயல்முறைகளும் தீயெதிர்ப்பு நடவடிக்கைமுறைகளும் பற்றிய பொதுவான அறிவுறுத்தல்கள் ;

(இ) கப்பலின் எச்சாரிக்கைகளினது பொருள் ;

(ஈ) தீயெதிர்ப்பு முறைமைகளையும் துணைப்பொருட்களையும் தொழிற்படுத்துதலும் பாவித்தலும் ;

(உ) தீக்கதவுகளின் தொழிற்பாடும் பாவனையும் ;

(ஊ) தீ மற்றும் புகைத் தணிப்புக்களின் தொழிற்பாடும் பாவனையும் ; அத்துடன்

(எ) தப்பிச் செல்வதற்கான முறைமைகளும் துணைப்பொருட்களும்.

(4) கப்பலிலுள்ள அலுவலர்களின் வழிகாட்டுகைக்காகப் பொது ஒழுங்கேற்பாட்டுத் திட்டங்கள் நிரந்தரமாக வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்; ஒவ்வொரு மேற்றளத்துக்குமான கட்டுப்பாட்டு நிலையங்கள், "A" வகுப்புப் பிரிவுகளினால் உள்ளடக்கப்பட்ட பல்வேறு தீப்பிரிவுகள், தீக்கண்டுபிடிப்பு மற்றும் தீ எச்சரிக்கை முறைமைகளின் விபரங்களுடன் சேர்த்து "B" வகுப்புப் பிரிவுகளினால் உள்ளடக்கப்பட்ட பிரிவுகள், தெளிப்பான் நிறுவுகை, தீயணைப்புத் துணைப்பொருட்கள், வெவ்வேறு அறைகள், மேற்றளங்கள் முதலியவற்றுக்கான அணுகுவழிகள், மற்றும் விசிறிக் கட்டுப்பாட்டு நிலைகளின் விபரங்களுட்பட காற்றோட்ட முறைமை, தணிப்புக்களின் நிலை மற்றும் ஒவ்வொரு பிரிவுக்கும் சேவையாற்றுகின்ற காற்றோட்ட விசிறிகளின் அடையாளங்காண் இலக்கங்கள் என்பவற்றை இவை தெளிவாகக் காட்டுதல் வேண்டும். மாற்றாக, மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் ஒரு சிறுநூலில் தரப்படலாம் ; இதன் பிரதியொன்று ஒவ்வோர் அலுவலருக்கும் வழங்கப்படுதல் வேண்டும். திட்டங்களும் சிறுநூல்களும் நாளாது வரையாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்; அவற்றுக்கான எவையேனும் மாற்றங்கள் செயல்முறைக்குகந்த வரை விரைவாகப் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய திட்டங்களிலும் சிறுநூல்களிலுமான விவரணம் ஆங்கிலத்திலிருத்தல் வேண்டும்.

(5) தீக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அல்லது அத்தகைய திட்டங்களைக் கொண்டுள்ள சிறுநூலொன்றின் இணைப் பிரதித்தொகுதியொன்று கரைப்புற தீயெதிர்ப்பு ஆளணியினரின் உதவிக்காகக் கப்பல்மேற்றள அறைக்கு வெளியே துலாம்பரமாக அடையாளமிடப்பட்டு பாதிக்கப்படாதவோர் அடைப்பில் நிரந்தரமாகக் களஞ்சியப்படுத்தப்படுதல் வேண்டும்.

13. (1) ஒழுங்குவிதி 11(3) இன் தேவைப்பாட்டுக்கு மேலதிகமாக, தீயணைப்புப் பன்முறைப்பயிற்சிகள், பயணிகளுக்கு அறிவிப்பதற்கும் பயணிகளை ஒன்றுகூடும் நிலையங்களுக்கும் புறப்படும் மேற்றளங்களுக்கும் கொண்டு செல்வதற்கும் உரிய கவனஞ் செலுத்தி சமவாயத்தின் அத்தியாயம் III இன் 30 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) முப்பத்தாறு பயணிகளுக்கு மேற்பட்டோரை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களில், இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட திட்டங்களும் சிறுநூல்களும், ஒழுங்கமைப்பினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின் அடிப்படையில் தீப்பாதுகாப்பு, தீக்கண்டுபிடிப்பு மற்றும் தீயணைப்புத் தொடர்பான தகவலை வழங்குதல் வெண்டும்.

14. (1) தீக்காப்புத் தொடர்பாக முறையான கப்பல் மற்றும் சரக்குக் கையாளுகைத் தொழிற்பாடுகளுக்காகத் தகவலையும் அறிவுறுத்தல்களையும் வழங்கும் நோக்கத்துக்காக ஒவ்வொரு கப்பலிலும் தீக்காப்புத் தொழிற்பாடுசார் சிறுநூலொன்று இருத்தல் வேண்டும்.

(2) மேலே (1) ஆம் உப ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தீக்காப்புத் தொழிற்பாடுசார் சிறுநூல், சரக்கைச் சுமையேற்றுகையிலும் இறக்குகையிலும் கப்பல் பயணிக்கையிலும் கப்பலின் பொதுவான தீக்காப்புக்காகக் கப்பற்றொகுதியுறுப்பினர்களின் பொறுப்புடைமைகள் சம்பந்தான தகவலை உள்ளடக்குதல் வேண்டும். பொதுச் சரக்குகளைக் கையாள்வதற்கு அவசியமான தீக்காப்பு முற்காப்புகள் விளக்கப்படுதல் வேண்டும். அபாயகரமான பண்டங்களையும் பற்றிஎரியத்தக்க தொகையான சரக்குகளையும ஏற்றிச்செல்கின்ற கப்பல்களுக்காக, தீக்காப்புத் தொழிற்பாடுசார் சிறுநூல், தோதானவாறு, சர்வதேசக் கடலோர தொகையான திண்மச் சரக்குகள் சட்டக்கோவை, சர்வதேச தொகையான இரசாயனப்பொருள் சட்டக்கோவை, சர்வதேச வாயுக்கப்பல் சட்டக்கோவை மற்றும் சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவை என்வற்றில் தொடர்புபட்ட தீயெதிர்ப்பு மற்றும் அவரசகாலச் சரக்குக் கையாளுகை அறிவுறுத்தல்களுக்கான குறிப்பீட்டை வழங்குதலும் வேண்டும்.

(3) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தீக்காப்புத் தொழிற்பாட்டுச் சிறுநூல் ஒவ்வொரு கப்பற்றொகுதியினர் உணவறையிலும் பொழுதுபோக்கறையிலும் அல்லது ஒவ்வொரு கப்பற்றொகுதியினர் சிற்றறையிலும் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருத்தலும் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தீக்காப்புத் தொழிற்பாட்டுச் சிறுநூல் 12 ஆம் ஒழுங்குவிதியில் தேவைப்படுத்தப்பட்ட பயிற்சிக் கைந்நூல்களுடன் இணைக்கப்படலாம்.

15. (1) தாங்கற் கலன்களின்மீது (14) ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தீக்காப்புத் தொழிற்பாட்டுச் சிறுநூல், பற்றி எரியத்தக்க ஆவிகள் எரிவதன்காரணமாகச் சரக்கிடத்துக்குத் தீ பரவுவதனைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குதல்

வேண்டுமென்பதுடன் சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் 16 ஆம் ஒழுங்குவிதியிலுள்ள ஏற்பாடுகளைக் கணக்குக்கெடுத்து, சரக்குத் தாங்கி வாயு வெளியேற்றுகை அத்துடன் /அல்லது வாயு உறைதல் நடவடிக்கைமுறைகளை உள்ளடக்குதலும் வேண்டும்.

(2) தாங்கற் கலன்களில் மந்தமான வாயு முறைமையைத் தொழிற்படுத்தல், சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் 16 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## பொது ஏற்பாடுகள்

16. நிருவாகத்தின் திருப்திக்குச் சமவாயத்தின் அத்தியாயம் II-2 இல் குறிப்பீடுகள் செய்யப்படும் விடயத்திலும் நடைமுறைப்படுத்தல் நியமங்களினூடாகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய குறிப்பீடுகளுக்கான நேரடிப் பொருள்கோடலெதுவும் வழங்கப்படாத விடயத்திலும், வகுப்பாக்கற் சங்கங்களின் சர்வதேசக் கழகத்தின் ஒன்று சேர்க்கப்பட்ட பொருள்கோடல், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருள்கோடலாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் (RO) அல்லது ஐக்கிய அமெரிக்க நாடுகள் கரையோரக் காவல் நிலையத்தினால், ஐக்கிய இராச்சியத்திலுள்ள கடலோரக் கரையோரக் காவல் முகவராண்மையினால் அல்லது யப்பானின் கடலோர நிருவாகத்தினால் அளிக்கப்பட்ட சாதன அங்கீகாரங்களைப் பணிப்பாளர் தலைமையதிபதி ஏற்றுக்கொள்கின்றார் ; ஆயின் அங்கீகாரங்கள் சமவாயத் தேவைப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கவிருத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, ஐரோப்பிய ஒன்றியக் கடல்சார் சாதனப் பணிப்புரைச் சான்றுப்படுத்துகை நடவடிக்கைமுறையின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள சாதனத்தையும் ஏற்றுக்கொள்வார்.

18. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம் விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல் ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.

19. சமவாயத்தின் அத்தியாயம் II-2 இலுள்ள அடிக்குறிப்புகளும் அத்தகைய அடிக்குறிப்புகளினால் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வொழுங்குவிதிகளின் பாகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

20. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

21. இவ்வொழுங்கு விதிகளில் -

“A” வகுப்புப் பிரிவுகள்” என்பது, பின்வரும் கட்டளைக்கற்களுடன் இணங்கியொழுகுகின்ற பிரிவிடுதல்களினால் மற்றும் மேற்றளங்களினால் அமைக்கப்பட்ட அப்பிரிவுகள் என்று பொருளாகும் :

1. அவை உருக்கினால் அல்லது வேறு சமமான பொருளினால் நிர்மாணிக்கப்படுகின்றன;
2. அவை பொருத்தமானமுறையில் கெட்டியாக்கப்படுகின்றன;
3. வெளிக்காட்டப்படாத பக்கத்தின் சராசரி தட்ப வெப்பநிலை, கீழே நிரற்படுத்தப்பட்ட நேரத்தினுள் மூலத் தட்ப வெப்பநிலைக்கு $140^0C$ க்கு மேல் அதிகரிக்காத வகையில் அல்லது ஏதேனும் புள்ளியிலான தட்ப வெப்பநிலை, ஏதேனும் மூட்டு உட்பட, மூலத் தட்ப வெப்பநிலைக்கு $180^0C$ க்குமேல் அதிகரிக்காத வகையில், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட எரியத்தக்கனவல்லாத பொருட்களுடன் அவை காப்பிடப்படுகின்றன:

வகுப்பு “A-60” 60 நிமிடங்கள்
வகுப்பு “A-30” 30 நிமிடங்கள்
வகுப்பு “A-15” 15 நிமிடங்கள்
வகுப்பு “A-0” 0 நிமிடங்கள்;

"B" வகுப்புப் பிரிவுகள்" என்பது, பின்வரும் கட்டளைக்கற்களுடன் இணங்கியொழுகுகின்ற பிரிவிடுதல்கள், மேற்றளங்கள், உச்ச வரம்புகள் அல்லது வரியீடுகளினால் அமைக்கப்பட்ட அப்பிரிவுகள் என்று பொருளாகும் :

1. எரியத்தக்க மேலொட்டுக்கள் சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் ஏனைய தோதான தேவைப்பாடுகளை எதிர்கொண்டால், அவை அனுமதிக்கப்படலாம் என்ற விதிவிலக்குடன், அவை, அங்கீகரிக்கப்பட்ட எரியத்தக்கனவல்லாத பொருட்களினால் நிர்மாணிக்கப்படுகின்ற மற்றும் "B" வகுப்புப் பிரிவுகளை நிர்மாணிப்ப திலும் நிறுவுவதிலும் பயன்படுத்தப்பட்ட எல்லாப் பொருட்களும் எரியத்தக்கனவல்ல;

2. வெளிக்காட்டப்படாத பக்கத்தின் சராசரித் தட்பவெப்பநிலை, கீழே நிரற்படுத்தப்பட்ட நேரத்தினுள், மூலத் தட்பவெப்பநிலைக்குமேல் $140^0$C க்குமேலாக அதிகரிக்காதவகையில், அல்லது ஏதேனுமொரு புள்ளியிலான தட்ப வெப்ப நிலை, ஏதேனும் மூட்டு உட்பட, மூலத் தட்ப வெப்பநிலைக்கு $225^0$C க்குமேல் அதிகரிக்காத வகையில் அவை காப்பீட்டுப் பெறுமதியைக் கொண்டுள்ளன:

   வகுப்பு "B-15" 15 நிமிடங்கள்
   வகுப்பு "B-0" 0 நிமிடங்கள்

3. நியமத் தீப்பரீட்சிப்பின் முதலாவது அரைமணி நேரத்தின் முடிவுக்குச் சுடர் செல்வதனைத் தடுப்பதற்கு இயன்றவகையில் அவை நிர்மாணிக்கப்படுகின்றன; அத்துடன்

4. ஒழுங்குக்காகவும் தட்ப வெப்பநிலை அதிகரிப்புக்காகவும் அது மேற்படி தேவைப்பாடுகளை எதிர்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்குத் தீப்பரீட்சிப்பு நடவடிக்கைமுறைகள் சட்டக்கோவைக்கிணங்க ஒரேவிதமான பிரிவொன்றின் பரீட்சிப்பைப் பணிப்பாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தினார் ;

"சரக்குக் கப்பல்" என்பது, ஒரு பயணிக் கப்பலாகவிராத ஏதேனும் கப்பல் என்று பொருளாகும்;

"சமவாயம்" என்பது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம் மற்றும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் அத்துடன் அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தம் என்று பொருளாகும்;

"ஒழுங்கமைப்பு" என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"பயணிக் கப்பல்" என்பது, பன்னிரெண்டு பயணிகளுக்கு மேற்பட்டோரை ஏற்றிச்செல்லும் ஒரு கப்பல் என்று பொருளாகும்;

"ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" என்பது, ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றங்கீகரிகப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள ஓர் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும் ;

"தாங்கற் கலன்" என்பது, பற்றி எரியத்தக்க தன்மையினவான திரவச் சரக்குகளைத் தொகையாக ஏற்றிச் செல்வதற்கு நிர்மாணிக்கப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட ஒரு சரக்குக் கப்பல் என்று பொருளாகும்;

"நீர்ப்புகாதது" என்பது, சேதமடையாத மற்றும் சேதமடைந்த நிலைமைகளில் இடம்பெறக்கூடிய சாத்தியமுள்ள நீரோட்டத்தின்கீழ் ஏதேனும் திசையில் நீர் செல்வதனைத் தடுக்கின்ற ஆற்றலைக்கொண்ட கப்பற்கட்டளை அளவையும் ஒழுங்கேற்பாடுகளையும் கொண்டுள்ளமை என்று பொருளாகும். சேதமடைந்த நிலைமையில், வெள்ளப்பெருக்கின் இடைநிலைக் கட்டங்களுட்பட, நீரோட்டமானது மிக்க மோசமான நிலைமையில் சமன்நிலையில் கருதப்படுதல் வேண்டும்.

"காலநிலையினால் பாதிக்கப்படாதது" என்பது, எவையேனும் கடல் நிலைமையகளில் நீரானது கப்பலினுள் ஊடுருவமாட்டாது என்று பொருளாகும்.

EOG 01 - 0243

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.